# கோரிக்கை எண்.50

# ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

## கொள்கை விளக்கக் குறிப்பு 2019-2020

ஆரம்ப காலகட்டத்தில், தமிழ்நாட்டில் குடிமைப் பணிகள் ஒழுங்குமுறைகள், 1889-ன் கீழ் மாநில அரசு ஓய்வூதியதாரர்கள் நிர்வகிக்கப்பட்டனர். 01-07-1960 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியில் அமர்த்தப்பட்டு ஓய்வு பெற்றவர்களுக்கு மெட்ராஸ் ஓய்வூதியச் சட்டத்தின் கீழ் (Madras Pension Code) ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. இச்சட்டத்திற்கு பதிலாக, 01-01-1979 அன்று முதல் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, நடைமுறைப்படுத்தப்பட்டது. மாவட்ட வாரியங்கள் 02-10-1960 அன்று கலைக்கப்பட்டன. இதன் விளைவாக, 01-07-1960 அன்று, மாவட்ட வாரிய ஓய்வூதியமில்லாத பணியாளர் அமைப்பில் பணியாற்றியவர்கள் அரசுப் பணியில் ஈர்க்கப்பட்டு, 1973

முதல் 1980 வரை பல்வேறு அரசு ஆணைகள் மூலம் ஓய்வூதிய சலுகைகள் அப்பணியாளர்களுக்கு நீட்டிக்கப்பட்டன.

**2.** ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால பலன்களை விரைவாக வழங்குவதை உறுதி செய்வதற்கும் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கும், 01-09-1994 முதல் ஓய்வூதிய இயக்ககம் செயல்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் 31-03-2019 ஆம் நாள் நிலவரப்படி 7,37,699 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் உள்ளனர். ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மாநில அரசு ஓய்வூதியதாரர்கள் | 4,12,224 |
| 2. | ஆசிரியர் ஓய்வூதியதாரர்கள் | 67,785 |
| 3. | மாநில அரசு குடும்ப ஓய்வூதியதாரர்கள் | 1,98,045 |

| வ. எண். | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 4. | ஆசிரியர் குடும்ப ஓய்வூதியதாரர்கள் | 28,569 |
| 5. | கருணைத்தொகை பெறும் ஓய்வூதியர்கள் உட்பட ஏனைய ஓய்வூதியதாரர்கள். | 31,076 |
| | **மொத்தம்** | **7,37,699** |

**3.** இந்த மானியக் கோரிக்கையின் கீழ் அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு நிதி உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால பயன்கள் அளிப்பது தொடர்பான முக்கியமான செலவினங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த மானியக் கோரிக்கையில், ஓய்வூதிய இயக்குநரகத்தின் செயல்பாடுகள், விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், முன்னாள் இந்திய தேசிய இராணுவப் படை பணியாளர்களுக்கும் ஓய்வூதியம் மற்றும் பிற பயன்கள் அளிப்பதும் அடங்கும்.

**4.** இந்த மானியக் கோரிக்கையின் கீழ், 2019-2020 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுகாலப் பயன்களுக்கான செலவினத்தை மேற்கொள்ளும் பொருட்டு 32,395.30 கோடி ரூபாயும், சமூக பாதுகாப்பு நலன்களுக்காக 20.42 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 32,415.72 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஓய்வூதியம் (Pension).

**5.** (அ) ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதி பணிக்காலம் 20 நிறைவுற்ற அரை ஆண்டுகளாகும் (20 completed half years). முழு ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதி பணிக்காலம் 60 நிறைவுற்ற அரை ஆண்டுகளாகும். மேலும், அரசுப் பணியாளர்கள் ஓய்வு பெறும்போது பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது இறுதி 10 மாத பணிக்காலத்தில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவீதம் இதில் எது

அதிகமோ அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது.

(**ஆ**) 1-10-2017 முதல், குறைந்தபட்ச மாத ஓய்வூதியம் 7,850 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம்.**

**6.** 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு, அவர்களின் வயதிற்கு ஏற்ப அடிப்படை ஓய்வூதியம் / அடிப்படை குடும்ப ஓய்வூதியத்தில் கீழ்க்கண்டவாறு கூடுதல் ஓய்வூதியமாக / கூடுதல் குடும்ப ஓய்வூதியமாக 1-1-2011 முதல் வழங்கப்பட்டு வருகின்றது.

| வ. எண். | ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் வயது வரம்பு | கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் | 31-03-2019 அன்றுள்ளபடி எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 80 முதல் 84 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 20%. | 40,725 |

| வ. எண். | ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் வயது வரம்பு | கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம் | 31-03-2019 அன்றுள்ளபடி எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2. | 85 முதல் 89 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 30%. | 16,501 |
| 3. | 90 முதல் 94 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 40%. | 4,294 |
| 4. | 95 முதல் 99 வரை | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 50%. | 780 |
| 5. | 100 மற்றும் அதற்கு மேல் | அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 100%. | 92 |
| | | **மொத்தம்** | 62,392 |

**உள்ளாட்சி அமைப்பு பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கான ஓய்வூதியம்.**

**7.** அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுவது போன்றே ஓய்வுகாலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

**பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்.**

**8.** (அ) ஒவ்வொரு ஊதிய திருத்தத்திற்குப் பின்னரும், பணியில் உள்ள அரசுப் பணியாளர்களுக்கு இணையாகவும் அகவிலைப்படியினை ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கி வருவதால், குறிப்பாக, 1-1-1996 முதல் “சமமான பதவி-சமமான ஓய்வூதியம்” என்ற கொள்கையின் அடிப்படையில் ஓய்வூதியத்தை மறுநிர்ணயம் செய்யும் முறையை ஏற்றுக்கொண்ட பிறகு, ஓய்வூதிய செலவினம் அதிவேக விகிதத்தில் உயர்ந்து வருகின்றது. அதிகரித்து வரும் சம்பளம் மற்றும் ஓய்வூதிய செலவினங்களால் அரசின்

நிதிச் சுமை தாங்க இயலாத அளவிற்கு அதிகரித்து வருவதால், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு கடன் வாங்குவதற்கு மட்டுமின்றி, வருவாய்ச் செலவினங்களை மேற்கொள்ள அரசு கடன் வாங்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறது. இது உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நலத் திட்டங்களை நிறைவேற்ற, தேவையான நிதி ஆதாரங்களை மட்டுப்படுத்துகிறது. காலப்போக்கில், பணியாளர்களின் எண்ணிக்கை குறைவதுடன், அந்த குறைந்த அளவிலான பணியாளர்களுடன், அதிக அளவிலான ஓய்வூதியதாரர்களுக்கான ஓய்வூதிய செலவினங்களை ஏற்க வேண்டி உள்ளதால், தாங்க இயலாத அளவில் நிதிச் சுமை ஏற்படும்.

(ஆ) ஓய்வூதியத் திட்டத்தின் காரணமாக மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு ஏற்படும் நிதிச் சுமையினை கருத்தில் கொண்டு, ஓய்வூதியத் திட்டத்தினை மறுசீரமைப்பதற்கான பரிந்துரைகளை அளிக்கும் பொருட்டு கர்நாடக அரசின் ஓய்வுபெற்ற தலைமைச்

செயலாளர் திரு.பி.கே.பட்டாச்சார்யா, அவர்களின் தலைமையில் மத்திய அரசு 26-06-2001 அன்று உயர்மட்ட வல்லுநர் குழுவினை அமைத்தது. இந்த உயர்மட்ட வல்லுநர் குழுவானது தனது பரிந்துரையில், பணியாளர்கள் மற்றும் மத்திய அரசிடமிருந்து சமமான பங்களிப்புடனும், பணியாளர்கள் வரையறுக்கப்பட்ட ஓய்வூதியம் பெறக்கூடிய வகையிலான புதுமையான திட்டத்தை பிப்ரவரி **2002-** இல் பரிந்துரைத்தது. மத்திய அரசின் நோக்கமானது, புதியதாக அரசுப் பணியில் சேரும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பங்களிப்புடன் கூடிய ஒரு திட்டத்தை வடிவமைப்பதோடு, அதற்கான கூடுதல் உட்கட்டமைப்பினை உருவாக்காமல், இதர பிரிவினர்களான, மாநில அரசுப் பணியாளர்கள், நடுத்தர வர்க்கத்தினைச் சார்ந்த சுயதொழில் புரிபவர்கள், குறைந்த வருவாய் ஈட்டும் பிரிவினைச் சார்ந்த அமைப்புசாராத் தொழிலாளர்கள்

ஆகியவர்களுக்கு உதவிசெய்யும் திறனைக் கொண்ட திட்டமாகும்.

(இ) ஓய்வூதிய சீர்திருத்தம் தொடர்பான மத்திய அரசின் முன்முயற்சியினைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் 2002-2003- ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

*"நாட்டின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழக அரசு தான் மிக அதிக அளவிலான, ஓய்வூதிய செலவுப் பொறுப்புகளை ஏற்றுள்ளது. மொத்த வருவாயினச் செவினங்களில் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் செலவினங்களில் இதுவும் ஒன்றாகும். 2001-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் தேதியிலிருந்து பணியில் நியமிக்கப்படும் அனைத்துப் பணியாளர்களும், மத்திய அரசினால் அமைக்கப்பட்டுவரும் பங்கேற்பு ஓய்வூதியத் திட்டத்தைப் (Contributory Pension Scheme)*

*போன்றதொரு புதிய திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவர் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது."*

(ஈ) வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டதன் தொடர் நடவடிக்கையாக, 01-04-2003 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ மாநில அரசுப் பணியில் சேர்ந்துள்ள பணியாளர்களுக்கு அரசு ஆணை (நிலை) எண்.259, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள் 06-08-2003 வாயிலாக பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மத்திய அரசு இதுதொடர்பான விரிவான ஆணைகள் வெளியிட்ட பின்னர், ஆணைகளில் திருத்தங்கள் செய்யப்பட்டு விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் வகுக்கப்படும் என இந்த அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ) 1-4-2003 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியில் சேர்ந்துள்ள பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 1-4-2003 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வூதியம் பெறத் தகுதியுள்ள

பணியில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளர்களிடமிருந்து பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பாக அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப் படியில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், அரசு அதற்கு சமமான அளவு பங்குத் தொகையினை செலுத்துகின்றது. கருவூலக் கணக்கு ஆணையரகம், அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தின் உதவியுடன் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கணக்குகளை பராமரித்து வருகின்றன.

(ஊ) இத்திட்டத்தின் கீழ், 31-3-2019 ஆம் நாள் நிலவரப்படி சுமார் 5,42,000 அரசு, அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்கள் கொண்டு வரப்பட்டு, பங்களிப்புத் தொகை மற்றும் வட்டி உட்பட மொத்தம் 27,589 கோடி ரூபாய் ஓய்வூதிய பொதுக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

(எ) 31-3-2019 ஆம் நாள் நிலவரப்படி, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், பணி ஓய்வு பெற்றவர்கள், பணித் றப்பு,

இறந்த மற்றும் பணி முற்றுவிப்பு செய்த 10,959 பணியாளர்களுக்கு இறுதி தீர்வு தொகையாக 485 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

## உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்:

**9.** அரசாணை (நிலை) எண்.260,நிதி (ஓ.கு.பி)த் துறை, நாள் 15-10-2015 வாயிலாக மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் உள்ளாட்சிகளில் பணிபுரியும் உள்ளாட்சிப் பணியாளர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கான மாநில ஒருங்கிணைப்பு அதிகாரியாக (State Nodal Officer) கருவூலக் கணக்குத் துறை ஆணையர் அவர்களை அரசு நியமித்துள்ளது. இதற்கான மென்பொருள் உருவாக்கப்பட்டு இது தொடர்பான புள்ளிவிவரங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## தேசிய ஓய்வூதிய முறை [National Pension System]:

**10.** தேசிய ஓய்வூதிய முறை 1-1-2004 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியில் சேர்ந்த அகில இந்தியப்பணி அலுவலர்களுக்காக

செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய ஓய்வூதிய முறைக்கு தேசிய பத்திரங்கள் வைப்பு நிறுவனம் (National Securities Depository Limited) மைய ஆவண வைப்பு நிறுவனமாக நியமனம் செய்யப்பட்டதுடன், ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையம் (PFRDA) அறக்கட்டளை வங்கியாகவும், ஓய்வூதிய நிதி மேலாளர் மற்றும் வருடாந்திர சேவை வழங்குவோராகவும் தமிழ்நாட்டைச் சார்ந்த அகில இந்தியப் பணி அலுவலர்களுக்காக தமிழக அரசினால் 28-06-2017 அன்று ஒப்பந்தம் செய்யப்பட்டது. அகில இந்தியப்பணி அலுவலர்களுக்கான சந்தா மற்றும் அரசின் பங்களிப்புத் தொகையாக 15.12 கோடி ரூபாய் தேசிய பத்திரங்கள் வைப்பு நிறுவனத்திற்கு (National Securities Depository Limited) 31-05-2019 வரை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**பழைய ஓய்வூதியத் திட்டம் மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றின் கீழ்வரும் பணியாளர்களுக்கான ஓய்வுக்காலப் பயன்கள்.**

**11.** (அ) ஓய்வு பெறும்போது பணியாளர் கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பில், அதிகபட்சமாக 240 நாட்களை

ஒப்படைப்பு செய்து விடுப்புச் சம்பளம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(ஆ) ஓய்வு பெறும் போது, பணியாளர் கணக்கில் உள்ள சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பில், அதிகபட்சமாக 180 நாட்களை 90 நாட்களாக மாற்றி ஒப்படைப்பு செய்து முழு சம்பளம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(இ) ஈட்டிய விடுப்பு மற்றும் சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பு ஆகியவற்றை ஒப்படைப்பு செய்து சம்பளம் பெற அடிப்படை ஊதியத்துடன், சிறப்பு ஊதியம், அகவிலைப் படி, வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படி ஆகியவற்றை சேர்த்துக் கணக்கிட்டு வழங்கப்படுகிறது.

(ஈ) ஓய்வு பெறும் பணியாளர், ஓய்வு பெற்ற பின்னர் தன்னுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் வசிக்க விரும்பும் வேறு ஏதாவது ஊருக்குச் செல்வதற்கான பயணப்படி வழங்கப்படுகிறது.

**பழைய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ்வரும் பணியாளர்களுக்கான பணிக்கொடை (Gratuity).**

**12. (அ) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை (Service Gratuity).**

இருபது நிறைவுற்ற அரை ஆண்டுகளுக்கு (20 completed half years) குறைவாக தகுதிப் பணி புரிந்தவர்களுக்கு, அவர்கள் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவுற்ற ஒவ்வொரு ஆறு மாத பணிக்காலத்திற்கும் 1/2 மாத ஊதியம் என்ற ஒரே சீரான வீதத்தில் கணக்கிடப்படுகிறது. இது ஆற்றிய பணிக்காக அனுமதிக்கத்தக்க ஓய்வுகாலப் பணிக்கொடையுடன் கூடுதலாக வழங்கப்படுகின்ற மொத்த தொகையாகும்.

**(ஆ) இறப்புப் பணிக்கொடை (Death Gratuity).**

அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போதே மரணமடையும் நேர்வில், 1-10-2017 முதல், பின்வரும் வீதங்களில் இறப்புப் பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:–

| வ. எண். | பணிக்காலம் | பணிக்கொடையின் வீதம் |
|---|---|---|
| 1. | ஓராண்டுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் இரு மடங்கு |
| 2. | ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் ஆறு மடங்கு |
| 3. | ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் பதினொரு ஆண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் பன்னிரண்டு மடங்கு |
| 4. | பதினொரு ஆண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் பதினைந்து மடங்கு |
| 5. | இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக | அதிகபட்சமாக மாத ஊதியத்தில் 33 மடங்கு என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரைமாதச் சம்பளம். அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக் கொடை ரூபாய் 20 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும். |

**(இ) ஓய்வுகாலப் பணிக்கொடை (Retirement Gratuity).**

ஒருவர், பத்து நிறைவுற்ற அரை ஆண்டுகளும் (10 completed half years) அதற்கு மேலும் தகுதிப் பணியை முடித்திருந்தால், அவர் ஓய்வு பெறும்போது உயரளவாக மாத ஊதியத்தில் $16^1/_2$ மடங்கு என்ற அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு நிறைவுற்ற அரை ஆண்டுகாலத் தகுதிப் பணிக்கும் மாத ஊதியத்தில் நான்கில் ஒரு பங்கு ஓய்வுகாலப் பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. 1-4-1998 அன்று அல்லது அதற்குப்பிறகு ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப் படியின் அடிப்படையில் பணிக்கொடை கணக்கிடப்படுகிறது.

**(ஈ)** 1-1-2016 முதல் இறப்பு பணிக்கொடை / ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்புத் தொகை 20 இலட்சம் ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**பழைய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ்வரும் பணியாளர்களுக்கான குடும்ப ஓய்வூதியம் (Family Pension under Old Pension Scheme).**

**13.** (அ) அரசுப் பணியாளர் ஒருவர், பணியாற்றும்போதோ அல்லது ஓய்வு பெற்ற பின்னரோ இறந்து விட்டால், அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும்.

(ஆ) ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்து விட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் தம்முடைய பணிக்காலத்தில் ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றியிருக்க வேண்டும். அரசுப் பணியாளர் ஒருவர் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றுவதற்கு முன்பே பணியிலிருக்கும் போது இறந்து விடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கு முன் அவரை மருத்துவ அலுவலர்

மருத்துவப் பரிசோதனை செய்து அரசுப் பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும். ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் இறக்கும் போது ஓய்வூதியம் பெறுபவராக இருந்திருக்க வேண்டும்.

(இ) அரசுப் பணியாளர் பணியில் இருக்கும்போது இறக்கும் நேர்வுகளில், அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 விழுக்காடு அவர் இறந்த பின்னர் 10 ஆண்டுகள் வரை அல்லது இறந்த ஓய்வூதியதாரரின் வயது 65 வயதை அடைந்திருந்தால் அதுவரை, இதில் எது முந்தியதோ அதுவரையில் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும். அதன் பின்னர் குடும்ப ஓய்வூதியம் அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 30 விழுக்காடாக அளிக்கப்படும்.

(ஈ) விதவை அல்லது மனைவியை இழந்த கணவனுக்கு, அவர் மறுமணம் செய்து கொள்ளும் வரையில் அல்லது இறக்கும் வரையில் இதில் எது முந்தியதோ

அதுவரையில் அவருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

(உ) விதவை அல்லது மனைவியை இழந்த கணவர் இறப்பிற்குப் பிறகு, அவருடைய தகுதியான குழந்தைகளுக்கு 25 வயது ஆகும் வரையிலோ அல்லது அவர்கள் திருமணம் செய்துகொள்ளும் வரையிலோ அல்லது அவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்குத் தேவையான பொருளீட்டும் வரையிலோ இதில் எது முந்தையதோ அதுவரை குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது.

(ஊ) எனினும் அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும்கூட, பொருளீட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மனநலம் குன்றியவராக அல்லது மனநலமற்றவராக இருந்தாலோ, மாற்றுத்திறனாளியாக இருந்து மற்றும் பொருளீட்ட இயலாதவராக இருந்தாலோ அவருக்கு, வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது.

(எ) ஓய்வூதியதாரர்களின் மணமாகாத / விவாகரத்து பெற்ற / விதவை மகள்களுக்கும், சில நிபந்தனைகளுக்குட்பட்டு அவர்களுக்கு, வாழ்நாள் முழுவதும் குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது.

(ஏ) அரசுப் பணியாளர்கள் / ஓய்வூதியதாரர்களின் 25 வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத / விதவை / விவாகரத்தான மகள்களுக்கு குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் வழங்குவது போல், திருநங்கைகள் / அரவாணி குழந்தைகளை மகள்களாக கருதி அவர்களுக்கும் குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

(ஐ) 1-10-2017 முதல் வழங்கப்படும் குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் மாதம் 7,850 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## கருணைத் தொகை (Ex-Gratia Payment).

**14.** பங்களிப்பு வருங்கால வைப்பு நிதி / மாநில அரசின் ஓய்வூதியமில்லாத பணியாளர் அமைப்பைச் சேர்ந்த

இறந்த பணியாளர் குடும்பங்களுக்கும், 1-1-1986-க்கு முன் பணியிலிருந்து ஓய்வுபெற்ற அல்லது பணியிலிருக்கும் போது இறந்துவிட்ட முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியில்லாத நபர்களுக்கும் மாதமொன்றுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை 645 ரூபாயுடன் 1-1-2019 முதல் 287 சதவீத அகவிலைப்படியும் வழங்கப்படுகிறது.

## ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்தல் (Commutation of Pension).

**15.** (அ) ஓய்வூதியம் பெறுவோர், தமது ஓய்வூதியத் தொகையில் $33^{1}/_{3}$ விழுக்காடு வரையிலான ஓய்வூதியத் தொகையினை ஒட்டு மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஓய்வுபெற்ற நாளிலிருந்து ஓராண்டுக்குள் அவர்கள் விண்ணப்பித்திருந்தால், மருத்துவ பரிசோதனை இல்லாமல், ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற மாநிலக் கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில்

பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஓய்வு பெற்ற நாளும், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றுக் கொண்ட நாளும் ஒரே நாளாக இருக்குமாயின் அவ்வாறு ஓய்வு பெற்றவர் அவர் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது ஓய்வு பெற்ற பிறகு இரண்டாவது மாதத்திலோ அல்லது அதன் பின்னரோ ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றிருந்தால் அவ்வாறு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து முழுமையாக ஓய்வூதியம் பெற்றிட அரசு அனுமதியளித்துள்ளது. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்த பிறகு, ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதிக்கும் அகவிலைப்படி வழங்கப்படுகிறது.

## ஓய்வூதியம் பெறுவோருக்கான ஏனைய பயன்கள்

**16. (அ) அகவிலைப்படி.**

(i) ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு, அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவது போலவே அகவிலைப்படி வழங்கப்படுகிறது.

(ii) இராணுவ ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறும் மாநில அரசின் ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகைக்கான அகவிலைப் படியுடன், மாநில அரசின் ஓய்வூதியத்திற்கான அகவிலைப் படியையும் சேர்த்துப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

(iii) இராணுவத்தில் பணியாற்றிய பின் மறு வேலைவாய்ப்பு அடிப்படையில் மாநில அரசு குடிமைப் பணியில் 1-4-2003-க்கு முன்பு வேலைவாய்ப்பு பெற்ற முன்னாள் படைவீரர்களின் குடும்பத்திற்கு 2-9-2016 முதல் இரண்டு குடும்ப ஓய்வூதியங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

(iv) தற்காலிக ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் அகவிலைப்படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

**(ஆ) மருத்துவப்படி.**

(i) 1-10-2017 முதல் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு மாதமொன்றுக்கு 300 ரூபாய் மருத்துவப் படி வழங்கப்படுகிறது.

(ii) தற்காலிக ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் மருத்துவப்படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

**(இ) பொங்கல் பரிசு.**

"C" மற்றும் "D" பிரிவு பணியாளர்களாக இருந்து ஓய்வுபெற்ற மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) உட்பட அனைத்து "C" மற்றும் "D" பிரிவு அரசு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் (Ad-hoc pensioners of all categories)

மற்றும் அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்கள் அதாவது ஓய்வூதியதாரர்கள் எந்த பணியாளர் பிரிவில் ஓய்வு பெற்றிருந்தாலும் / பணியாளர்கள் பணியிடை மரணம் அடைந்திருந்தாலும் ஒட்டுமொத்த பொங்கல் பரிசுத் தொகையாக 500 ரூபாய் வழங்கப்படுகிறது.

**(ஈ) பண்டிகை முன்பணம்.**

அரசுப் பணியாளர்களுக்கு வழங்குவதுபோல ஓய்வூதியதாரர்களுக்கும் பண்டிகை முன்பணம் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை 1,000 ரூபாயிலிருந்து 14-3-2013 முதல் 2,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

## ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத் துணை உட்பட) குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2018.

**17.** (அ) ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத் துணை உட்பட) / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2014, 1-7-2014 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1-7-2018 முதல் 30-6-2022 முடிய, நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு

தொகுப்பு கால அளவிற்கு சில சிறப்பு அம்சங்களுடன் நீட்டிக்கப்பட்டுள்ளது. பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இப்புதிய திட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றை பெற உச்சவரம்பு 2 இலட்சம் ரூபாயிலிருந்து 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) இப்புதியத் திட்டத்தில், ஓய்வூதியதாரர்களைச் சார்ந்துள்ள மகன் / திருமணமாகாத மகள் வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மனநலம் குன்றியவராக அல்லது மனநலமற்றவராக இருந்தாலோ, மாற்றுத்திறனாளியாக இருந்து மற்றும் பொருளீட்ட இயலாதவராக இருந்தாலோ, மணமாகாத / விவாகரத்து பெற்ற / விதவை மகள்கள் ஆகியோர்கள் இப்பயனைப் பெற, சில நிபந்தனைகளுக்குட்பட்டு, நீட்டிக்கப்பட்டுள்ளது.

(இ) இப்புதிய திட்டத்தில், கீழ்க்காணும் மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றைப் பெற உச்சவரம்பு 7.50 இலட்சம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது:–

(i) புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிரியக்க சிகிச்சை மற்றும் புற்றுநோய்க் கட்டிகளுக்கான நோய் தடுப்பாற்றல் சிகிச்சை முறைகள்.

(ii) கல்லீரல், சிறுநீரகம், இதயம், நுரையீரல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை.

(iii) சிக்கலான இதய அறுவை சிகிச்சை மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை.

(iv) விபத்து மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் எலும்பு முறிவுகள்.

(v) இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை, ஆன்யூரிசம் (Aneurysm) மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி (Angioplasty).

(vi) தீக்காயங்களுக்கான சிகிச்சை.

(ஈ) மேலும், கண்புரை அறுவை சிகிச்சைக்கான மருத்துவ உதவியின் உச்சவரம்பு கண் ஒன்றிற்கு 20,000 ரூபாய் வீதமும், கர்ப்பப்பை நீக்குவதற்கான அறுவை சிகிச்சை உதவியின் உச்சவரம்பு 45,000 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(உ) இப்புதிய திட்டத்தில், திடீரென்று எதிர்பாராத விதமாக, உடனடி கவனிப்பு தேவைப்படுகின்ற மற்றும் விபத்தை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்படாத (Non-Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 114 வகையான சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை நடைமுறைகள் பணச் செலவின்றி மேற்கொள்வதற்குத் தமிழ்நாடு, புதுச்சேரி, திருவனந்தபுரம், புதுதில்லி மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களில் உள்ள 988 அங்கீகரிக்கப்பட்ட (Network) மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 01-07-2018 முதல் 30-06-2022

வரையிலான நான்காண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் காப்பீட்டு கட்டணமாக ஒரு ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரருக்கு 3,800 ரூபாய் வீதம் யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்திற்கு சேவை வரிகளுடன் அரசு ஆரம்பத்தில் செலுத்தும். இதற்கென ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து ஒவ்வொரு மாதமும் 350 ரூபாய் வீதம் அவர்களது மாதாந்திர ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியத்திலிருந்து ஜூலை மாதம் 2018 முதல் பிடித்தம் செய்யப்படுகிறது. பிடித்தம் செய்யப்பட்ட தொகையை விடக் கூடுதலாகச் செலுத்தப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் வரி உட்பட காப்பீட்டுக் கட்டணத்தை அரசு / அரசு சார்ந்த அமைப்புகள் ஏற்கும்.

(ஊ) 01-07-2014 முதல் 30-06-2018 வரையிலான நான்காண்டுகளில் 2,01,285 பயனாளிகள் 578.01 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர்.

(எ) இத்திட்டம் நீட்டிக்கப்பட்ட 01-07-2018 முதல் 30-06-2019 வரை 62,593 பயனாளிகள் 218.43 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

(ஏ) மேலும், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் அரசு பல்கலைக் கழகங்கள், விருப்பமுள்ள மாநில அரசு அமைப்புகள்/நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரிந்து அந்தந்த நிறுவனங்களிடமிருந்து ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு, அந்த நிறுவனங்களால் கூடுதலாகச் செலுத்தப்படும் தொகையினை மாநில அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்காமல் அந்த நிறுவனங்களால் செலுத்தப்படும் நிலையில், அப்படியே இத்திட்டத்தினை நீட்டித்துக்கொள்ள அரசினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்.

**18.** 1-1-1997 முதல் ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கு, ஓய்வூதியத்திலிருந்து மாதமொன்றுக்கு சந்தாத் தொகையாக 80 ரூபாய் பிடித்தம் செய்யப்படுகிறது. இந்த நிதிக்கு ஒரு மாதத்திற்கான சந்தாத் தொகை செலுத்திய பிறகு, இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் தகுதியான குடும்ப உறுப்பினர்களுக்கு அல்லது ஓய்வூதியதாரரால் நியமனம் செய்யப்பட்ட நியமனதாரருக்கு 07-06-2013 முதல் உயர்த்தப்பட்ட அளவாக 50,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் 31-05-2019 வரை இறந்துபோன 2,05,257 ஓய்வூதியதாரர்களின் குடும்பங்களுக்கு 728.09 கோடி ரூபாய் இத்திட்டத்தின்கீழ் நிதி வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ் நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம்.**

**19.** (அ) இத்திட்டம் 1-4-1984 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதம் 20 ரூபாய் வீதம் 148 மாதங்கள் வரை அரசு பணியாளரிடம் பிடித்தம் செய்யப்பட்டு, அவர் பணியிலிருந்து ஓய்வுபெறும் போது, அவர் செலுத்திய பங்களிப்புத் தொகை, வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையாக 10,000 ரூபாய் சேர்த்து வழங்கப்படுகிறது.

(ஆ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000 என்ற புதிய திட்டம் 1-10-2000 முதல் தொடங்கப்பட்ட பின்னர் முந்தைய திட்டத்தில் பணியாளர்கள் சேர்க்கை நிறுத்தப்பட்டது. எனினும் முந்தைய திட்டத்தில் சேர்க்கப்பட்ட பணியாளர்கள் ஓய்வுபெறும் போது உரிய பணப்பயன் அத்திட்டத்தில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 30-9-2000 வரை அரசுப் பணியில் உள்ள அனைத்து நிரந்தரப் பணி அரசுப் பணியாளர்களும் விருப்பத்தின்பேரில் இப்புதிய திட்டத்தில் சேர்க்கப்பட்டு 50 ரூபாய் வீதம் மாதந்தோறும், ஓய்வு பெறும்

மாதத்திற்கு முந்தைய மாதம் வரை செலுத்தி அத்தொகை ஓய்வு பெறும்போது வட்டியுடன் திரும்ப வழங்கப்படுகிறது.

(இ) 1-10-2000 அன்றும், அதற்குப் பிறகும் பணியில் சேரும் பணியாளர்கள் அனைவருக் இத்திட்டம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு மாதச் சந்தா தொகை 70 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அவர் பணியிலிருந்து ஓய்வுபெறும் போது, அவர் செலுத்திய பங்களிப்புத் தொகை, வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையாக 10,000 ரூபாய் சேர்த்து வழங்கப்படுகிறது.

(ஈ) மேற்கண்ட திட்டங்களுக்கு ஓய்வூதிய இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு அலுவலர் ஆவார். வரவு–செலவுத் திட்டத்தில் அரசால் அனுமதிக்கும் தொகையை, ஓய்வு பெறும் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு, (அரசு உதவி பெறும் பள்ளிகள் / கல்லூரிகள் / தொழில்நுட்ப கல்லூரிகள் தவிர) அந்தந்தத் துறைகள் மூலம் தொகை வழங்கப்பட்டு தீர்வு செய்யப்படுகிறது.

**20. கடந்த ஆண்டுகளில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பயன்கள் குறித்து ஏற்பட்டுள்ள செலவு வருமாறு:–**

| ஆண்டு | ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பலன்கள் குறித்த மொத்தச் செலவு (ரூபாய் கோடியில்) | மொத்த வருவாய் கணக்கு வரவுகளில் சதவீதம் |
|---|---|---|
| 2001-2002 | 3,050.48 | 16.07 |
| 2002-2003 | 3,488.20 | 16.86 |
| 2003-2004 | 3,279.96 | 13.84 |
| 2004-2005 | 3,921.05 | 13.78 |
| 2005-2006 | 4,488.83 | 13.22 |
| 2006-2007 | 5,461.68 | 13.35 |
| 2007-2008 | 6,038.96 | 12.71 |
| 2008-2009 | 7,776.21 | 14.13 |
| 2009-2010 | 8,439.24 | 15.11 |
| 2010-2011 | 11,855.27 | 16.89 |
| 2011-2012 | 12,687.97 | 14.89 |
| 2012-2013 | 13,248.08 | 13.41 |
| 2013-2014 | 14,934.37 | 13.82 |
| 2014-2015 | 17,528.06 | 14.32 |
| 2015-2016 | 18,490.89 | 14.33 |
| 2016-2017 | 20,176.74 | 14.39 |

| ஆண்டு | ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பலன்கள் குறித்த மொத்தச் செலவு (ரூபாய் கோடியில்) | மொத்த வருவாய் கணக்கு வரவுகளில் சதவீதம் |
|---|---|---|
| 2017-2018 | 22,432.23 | 15.34 |
| 2018-2019 (RE) | 28,230.44 | 15.63 |
| 2019-2020 (BE) | 32,415.72 | 16.39 |

## மின்னணு ஓய்வூதியம் (e-Pension).

**21.** ஓய்வூதியம் வழங்கும் நடைமுறையும் மற்றும் ஓய்வூதியதாரர்கள் தொடர்பான புள்ளிவிவரங்களையும் பெற கணினித் தகவல் மென்பொருள் அனைத்து மாவட்டங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களை நேரடியாக அவரவர் வங்கிக் கணக்குகளில் மின்னணு தீர்வு முறை (Electronic Clearing Service) / மண்டல மின்னணு தீர்வு முறை (Regional Electronic Clearing Service) வழியாக வரவு வைக்கப்படுகிறது. மேலும், முதன்மை மாநில கணக்காயரின் தொகுப்பிலுள்ள ஓய்வூதியம் குறித்த விவரங்கள்

அனைத்தும் மின்னணு ஓய்வூதிய மையத் தொகுப்பிற்கு (e-Pension Central Server) மாற்றப்பட வழிவகை செய்வதன் மூலம் ஓய்வூதியம் குறித்த விவரங்களைத் துல்லியமாக பெறுவதோடு குறைந்த செலவு மற்றும் குறுகிய காலத்தில் அதிக பயன் பெற வழி ஏற்படும்.

**ஓய்வூதியதாரர்களின் நேர்காணல் (Mustering).**

**22.** (அ) ஓய்வூதியதாரர்கள் /குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ஏற்படும் இடர்களை கருத்தில் கொண்டு, ஓய்வூதியதாரர் நேர்காணலை எளிமைப்படுத்தும் முயற்சியாக தேசிய தகவல் மையத்துடன் (NIC) இணைந்து ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களை அடையாளம் காண மின்னணு விரல் ரேகை பதிவு செய்தல் முறை நடைமுறைப் படுத்தப்படுகிறது. ஓய்வூதியதாரர்களின் வருடாந்திர நேர்காணலின் போது ஆதார் எண்கள் ஓய்வூதியதாரர்களின் விவரங்களுடன் இணைக்கப்பட்டு வருகிறது. ஓய்வூதியதாரர்களுக்காக இந்திய அரசால் தொடங்கப்பட்ட உயிர்புள்ளியியல் (Biometric) துணைகொண்ட இலக்க முறை

*ஜீவன் பிரமான்* சேவையாகும். தற்பொழுதுள்ள ஆதார் இணைப்பினை பயன்படுத்தி, ஓய்வூதியதாரர்கள் *ஜீவன் பிரமான்* இணையதளம் வழியாக ஆதார் உயிர்புள்ளியியல் சான்றளிப்பின் அடிப்படையில் அரசு முகமையினால் வழங்கப்படும் வாழ்வுச் சான்றிதழ் ஒரு தகுதிவாய்ந்த சான்றிதழாக ஏற்கப்படுவதால், ஓய்வூதியதாரர்கள் *ஜீவன் பிரமான்* இணையதளம் வழியாக இச்சேவையினை பயன்படுத்திக்கொள்ள ஊக்கப்படுத்தப்படுகின்றனர்.

(ஆ) ஆதார் எண்களை ஓய்வூதியதாரர்களின் விவரங்களுடன் 100 சதவீதம் இணைக்கும் நடவடிக்கையினை அரசு தீவிரப்படுத்தி வருகிறது. இப்பணி நிறைவேற்றப்பட்டவுடன், எந்த விதமான இடர்ப்பாடுகளும் இல்லாமல் அனைத்து ஓய்வூதியதாரர்களும் ஜீவன் பிரமான் இணையதளம் வழியாகவே வாழ்வுச் சான்றிதழை உருவாக்கி பயன்படுத்தலாம். இதனால் ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் ஓய்வூதியரின் நேர்காணலுக்கு அல்லது உரிய அலுவலரால் வழங்கப்படும் வாழ்வுச் சான்றிதழுக்கு

வற்புறுத்தாமல் இணையதளம் மூலம் வாழ்வுச் சான்றிதழை பதிவிறக்கம் செய்து பயன்படுத்த வழிவகை ஏற்படும்.

**23.** இது தவிர ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப் படுவதால், ஓய்வூதியதாரர்கள் தங்களுக்கான அரசின் சேவைகள் அனைத்தையும் எவ்வித சிரமமுமின்றி இதன் மூலம் மிக எளிதான முறையில் அணுக முடியும்.

## ஓய்வூதிய பதிவுகள் மின்னணுமயமாக்கல் (Digitization).

**24.** ஓய்வூதியம் பெறும் ஆணைகளையும், பிற பதிவுகளையும் கணினிமயமாக்க ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை மற்றும் அனைத்து கருவூலங்களில் மின்னணுமயமாக்கல் செய்யப்பட்டு இந்த பதிவுகளை மின்னணு ஓய்வூதிய மென் பொருளில் இணைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மின்னணுமயமாக்கலுக்கு பின்னர், பதிவுகள் மற்றும் தகவல்களை நீண்ட காலம் பாதுகாப்பாக வைக்கவும், ஒரே நேரத்தில் பதிவுகளை

ஓய்வூதியதாரர் உட்பட பலர் எல்லைகளைக் கடந்து பயன்படுத்தவும், பார்வையிடவும் இது வழிவகுப்பதோடு, கணினிமயமாக்குவதன் காரணமாக பதிவுகள் சிதைவு மற்றும் நிறமாற்றம் தவிர்க்கப்பட்டு, தெளிவாக மேம்பட்ட தரத்துடன் அவற்றைப் பாதுகாக்க இயலும். சென்னை மாநில கணக்காயர் அலுவலகத்தில் உள்ள ஓய்வூதியம் தொடர்பான ஆவணங்களை மின்னணுமயமாக்கம் செய்திட அரசு 95.53 இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்துள்ளது.

**ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அடையாள அட்டை (Identity Card)**

**25.** ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர் களுக்கு அடையாள அட்டை (Identity Card) வழங்கிட அரசு ஆணையிட்டு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் 16-04-2018 அன்று இத்திட்டம் தொடங்கப்பட்டு ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. அரசு இ-சேவை மையங்களில் சேவைக் கட்டணமாக ஒரு அடையாள அட்டைக்கு 30 ரூபாய் செலுத்தி ஓய்வூதியதாரர்கள் / குடும்ப

ஓய்வூதியதாரர்கள் அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளலாம்.

## ஓய்வூதியர் இணையம் (Pensioners Portal):

**26.** தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களுக்காக பிரத்யேகமாக ஒரு ஓய்வூதியர் இணையம் உருவாக்க அரசாணை (நிலை) எண்.359, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள் 07-12-2017-ல் ஆணை வெளியிடப்பட்டது. இதற்கான வலைதளம் மற்றும் மென்பொருள் உருவாக்கப்பட்டு, 18-01-2019 அன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இவ்வலைதளத்தில் ஓய்வூதியதாரர்கள், தங்களது ஓய்வூதியம் பெற்ற விவரம், ஓய்வூதியம் தொகுத்துப் பெற்றதை மீளப்பெறுவது, கூடுதல் ஓய்வூதியம், ஓய்வூதியதாரர்களின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பான விவரங்கள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வலைதளத்தின் மூலம் ஓய்வூதியதாரர்கள் தாங்களாகவே தங்களுக்குத் தேவையான விவரங்களை பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

**பொதுத் துறை வங்கிகளின் மூலம் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களை கருவூலத் துறைக்கு மாற்றம் செய்யும் முன்னோடித் திட்டம்:**

**27.** அரசாணை எண்.268, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள் 18-09-2017 வாயிலாக பொதுத் துறை வங்கிகளில் ஓய்வூதியம் பெறும் சுமார் 79,000 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களை கருவூலம் மற்றும் கணக்குத் துறையின் முன்னோடித் திட்டம் வழியாக ஓய்வூதியம் பெறுவதற்கு ஆணை வெளியிடப்பட்டது. பொதுத்துறை வங்கிகளிடமிருந்து ஓய்வூதியர்களின் ஆவணங்கள் பெறப்பட்டு, கருவூலங்களின் e-pension தரவுதளத்துடன் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

## ஓய்வூதிய இயக்குநரகம்

**28.** அரசு 1-9-1994 முதல் ஓய்வூதிய இயக்ககத்தை உருவாக்கியது. இவ்வியக்ககம் தற்போது நிதித் துறை கூடுதல் செயலாளர் நிலையில் உள்ள அலுவலரை

இயக்குநராகக் கொண்டுள்ளது. இந்த இயக்ககம், கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது

(அ) மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஓய்வூதிய குறைகளைத் தீர்த்தல்.

(ஆ) ஓய்வூதியதாரர்களின் குறைகளை, ஓய்வூதிய அதாலத் அமைப்பு மூலம் தீர்த்தல்.

(இ) ஓய்வூதியதாரர்கள் கோரும் தெளிவுரைகளை வழங்கிடல்.

(ஈ) அரசுத் துறைகளின் தொழிற்சாலை பணியாளர்களின் சேமநல நிதித் திட்டம் தொடர்பான பணிகளை நிர்வகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்.

(உ) தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நலநிதித் திட்டம், 1995 ன் கீழ் நிலுவையிலுள்ள நேர்வுகளை தீர்வு செய்தல்.

(ஊ) குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம், 1997–ஐ நிர்வகித்தல் மற்றும் அதை செயல்முறைபடுத்துதல்.

(எ) தமிழ்நாடு அரசு பணியாளர்களின் சிறப்பு சேமநலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984–ன் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு பணி.

(ஏ) தமிழ்நாடு அரசு பணியாளர்களின் சிறப்பு சேமநலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000–ன் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு பணி.

(ஐ) ஓய்வூதிய இயக்ககத்தில் பணிபுரிவோரின் ஊதியம் மற்றும் இதர பயன்களின் வரவு செலவுத் திட்டம் மதிப்பீடு செய்தல் மற்றும் துறைக் கணக்குகளை சம்பளக் கணக்கு அலுவலகம் மற்றும் மாநிலக் கணக்காயர் கணக்குகளுடன் ஒத்திசைவு பணி செய்தல்.

(ஒ) அமைப்புசாரா தினக்கூலிப் பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கான தமிழ்நாடு அரசு சமூக பாதுகாப்புத் திட்டம், 1974 ஐ நிர்வகித்து நிறைவேற்றுதல்.

# ஓய்வூதியதாரர்கள் குறை தீர்வு

## ஓய்வூதிய இயக்ககத்தின் மூலம் ஓய்வூதியதாரர்களின் குறை தீர்த்தல்.

**29.** பல்வேறு மாவட்டங்களிலுள்ள ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள்,

முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலமாக பெறப்படும் மனுக்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலமாக பெறப்படும் மனுக்கள் ஆகியவற்றின் மீது உரிய கவனம் செலுத்தப்பட்டு, ஓய்வூதியதாரர்களின் குறைகள் உடனடியாக தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. 2018-ஆம் ஆண்டில் முதலமைச்சரின் தனிப்பிரிவிலிருந்து 183 மனுக்களும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 165 மனுக்களும் பெறப்பட்டு பதில் அளிக்கப்பட்டது. இது தவிர பல்வேறு மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட 2,882 ஓய்வூதியதாரர் குறைதீர்த்தல் மனுக்களும் தீர்வு செய்யப்பட்டன. மேலும், மனுதாரர்களின் குறைகள் தீர்க்கப்படும் வகையில் மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

## மாவட்ட ஆட்சியாளர்களின் ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் நாள் கூட்டம்.

**30.** மாவட்ட ஆட்சியாளர்கள் ஓய்வூதியதாரர்–களின் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தினை நான்கு மாதங்களுக்கு ஒரு முறை தங்களது மாவட்டங்களில் நடத்துகின்றனர். இக்கூட்டத்தில், இயக்குநர் அல்லது

இணை இயக்குநர் பங்கேற்று, அம்மாவட்டத்திலுள்ள ஓய்வூதியதாரர்களின் குறைகள் கேட்டறியப்பட்டு, அவற்றை விரைந்து களைந்திட மாவட்ட ஆட்சியருக்கு உதவி புரிகின்றனர். ஓய்வூதிய பலன்கள் தொடர்பான கோப்புகள் மாநில கணக்காயர் அலுவலகத்தில் நிலுவையிலிருந்தால் அவற்றை விரைந்து முடித்திட, இவ்வியக்ககத்தால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்ட வாரியான குறை தீர்க்கும் மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மாவட்டங்களில் ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் கூட்டங்கள் முறையாக நடத்தப்பட்டு, துறைவாரியாக ஓய்வூதியதாரர்களின் குறைகள் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## ஓய்வூதிய அதாலத்.

**31.** ஓய்வூதியதாரர்களின் குறை தீர்ப்பதற்கென்று லோக் அதாலத், உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணையத்தில் 22-02-2002 முதல் செயல்படுகிறது. ஓய்வூதிய அதாலத் முன்பு வைக்கப்படும் ஓய்வூதியதாரர் குறைகள் மீது வழங்கப்படும் உத்தரவின் மீது தொடர் நடவடிக்கை எடுத்து செயல்படுத்திட, ஓய்வூதிய

இயக்குநர், சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாநிலக் கணக்காயரின் பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குழுவினை அரசு அமைத்துள்ளது. ஓய்வூதிய துறை இயக்குநர் ஓய்வூதிய அதாலத் ஒருங்கிணைப்பு அலுவலராவார் (Nodal Officer). ஒவ்வொரு மாதமும் இந்த அதாலத் நடைபெறுகிறது. 01-01-2018 முதல் 31-12-2018 வரை 88 ஓய்வூதியதாரர்களின் மனுக்கள் விசாரிக்கப்பட்டு 49 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளன.

## ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் மற்றும் ஓய்வூதிய சங்கங்கள் தொடர்பான கூட்டம்.

**32.** ஓய்வூதிய இயக்குநர், ஓய்வூதியதாரர் சங்கப் பிரதிநிதிகளின் முன்னிலையில் ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் மற்றும் கருவூல அலுவலர்களுடன் மாதாந்திர கூட்டங்கள் நடத்தி, ஓய்வூதியதாரர்களுக்கு கருவூலம் மற்றும் சென்னையிலுள்ள ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் மூலம் ஓய்வூதியம் பெறுவதில் ஏற்படும் குறைகள் தீர்க்கப்படுகின்றன.

## ஓய்வூதியர்களின் கையேடு.

**33.** ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்கள், அவ்வப்பொழுது அரசால் வெளியிடப்படும் ஆணைகள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் கருத்துரு அனுப்ப வழிகாட்டுதல் ஆகியவற்றை ஓய்வூதியதாரர்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு கையேடு ஒன்று தயார் செய்யப்பட்டு இணைய தளத்தில் (www.tn.gov.in/dop) வெளியிடப்பட்டுள்ளது. ஓய்வூதியப் படிவங்களை இணைய தளத்தில் இருந்து உடனடி உபயோகத்திற்காக பதிவிறக்கம் செய்யலாம். மின் அஞ்சல் மூலமாகவும் ஓய்வூதிய இயக்குநரகத்தை தொடர்பு கொள்ளலாம். இத்துறைக்கான மின் அஞ்சல் முகவரி dop@tn.nic.in.

## ஓய்வூதிய இயக்குநரக கணினிமயமாக்கம்.

**34.** குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் தேவையான அடிப்படை விவரங்கள் அளிக்கப்பட்டு, ஒப்பளிப்பு ஆணைகள் வெளியிடப்படுகின்றன. அதைப்போன்று, தொழிலாளர்

சேமநல நிதித் திட்டம் 1969 -ன் மூலம் வழங்கப்பட வேண்டிய இறுதித் தொகை, கணினி மூலம் பணம் பட்டுவாடா (NEFT) பயனாளிகளின் வங்கி கணக்குகளில் பணம் வரவு செய்யப்பட்டு வருகிறது.

## விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் முன்னாள் இந்திய தேசிய ராணுவத்தினருக்கும் ஓய்வூதியம் மற்றும் ஏனைய பயன்கள்.

**35.** விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு நமது நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட தியாகிகளுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் உதவிகள் வழங்குவதற்கு தமிழ்நாடு அரசு எப்பொழுதும் முன்னுரிமை அளித்து வருகிறது. அவர்களின் நலனுக்காக விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்குதல், மருத்துவ வசதி, இலவசப் பேருந்து வசதி அளித்தல், வீடுகள் ஒதுக்கீடு மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளித்தல் போன்ற பல திட்டங்களை அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

**36.** விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டம் 1-10-1966 முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டு மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறை தண்டனை பெற்றவர்கள் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்கள், துப்பாக்கிச் சூடு அல்லது சுதந்திரப் போராட்டத்தின்போது காவலர் தடியடி ஆகியவற்றில் இறந்தவர்கள் அல்லது நிரந்தரமாக ஊனமுற்றவர்கள் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாவர். இது தவிர, இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும், 1946–ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், மதுரை சதித்திட்ட வழக்கில் சிறைத் தண்டனை அடைந்தவர்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், சுதந்திரப் போராட்டத்தின் போது பிடியாணை பிறப்பிக்கப்பட்டதை தவிர்ப்பதற்காகத் தலைமறைவாக இருந்து சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களும், சொத்து பறிமுதல் செய்யப்பட்டவர்களும், அரசுப் பணியிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டவர்களும்,

அதற்கு ஆதாரமாக நீதிமன்ற அல்லது அரசு ஆவண ஆதாரங்களைச் சமர்ப்பித்தால் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாக இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளில் ஒன்றான மூன்று மாத கால சிறைவாசம் என்பது 1-4-1980 முதல் மூன்று வார காலம் எனக் குறைக்கப்பட்டது. இந்த ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான உச்ச வரம்பு 11-3-1983 முதல் நீக்கப்பட்டது.

**37.** விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் அரசால் அவ்வப்போது உயர்த்தப்பட்டுள்ளது. 15-8-2018 முதல் இந்த ஓய்வூதிய தொகை மாதம் 13,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது.

**38.** மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர் இறக்க நேரிட்டால், அவருடைய வாழ்க்கைத் துணை / உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து குடும்ப ஓய்வூதியம்

வழங்கப்படுகிறது. மேற்படி ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் மகனாயிருந்தால் 18 வயதுக்கு மேலும், மகளாயிருந்தால் 21 வயதுக்கு மேலும், சுயமாய் வருவாய் ஈட்டி வாழமுடியாத அளவிற்கு மனவளர்ச்சி குன்றியவராகவோ அல்லது மாற்றுத் திறனாளியாகவோ இருக்க நேர்ந்தால், அவர்களது வாழ்நாள் முழுமைக்கும், தொடர்ந்து குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இந்த குடும்ப ஓய்வூதியத் தொகையும் அவ்வப்போது உயர்த்தப்பட்டுள்ளது. 15-8-2018 முதல் குடும்ப ஓய்வூதியத் தொகை மாதம் 6,500 ரூபாயிலிருந்து 7,500 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

**39.** விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு நாட்டிற்காக குறிப்பிடத்தக்க வகையில் சிறப்புற பணியாற்றிய மேலோரின் தியாகத்தைப் பாராட்டி அவர்களது வாரிசுகளுக்கும் சிறப்பு ஓய்வூதியமானது அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின்படி, சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான முதுநிலை வழித்தோன்றல்கள், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த

முன்னாள் மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் தகுதியான வழித்தோன்றல்கள் மற்றும் வ.உ.சிதம்பரனார் அவர்களின் வழித்தோன்றல் ஆகியோருக்கு மாதம் ஒன்றிற்கு 7,500 ரூபாயாக உயர்த்தி 15-8-2018 முதல் வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது, சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் 104 பேர்கள், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான முதுநிலை வழித்தோன்றல்கள் 5 பேர்கள் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் தகுதியான வழித்தோன்றல்கள் 60 பேர்களுக்கும் மற்றும் வ.உ.சிதம்பரனார் அவர்களின் வழித்தோன்றல் ஒருவருக்கும் இந்த சிறப்பு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பயனாளிகள் சிறப்பு ஓய்வூதியத்தை அவர்கள் வாழ்நாள் முழுவதும் பெறுவார்கள்.

**40.** விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:

**(அ) மருத்துவ வசதிகள்:**

மத்திய அரசிடமிருந்தோ அல்லது மாநில அரசிடமிருந்தோ அல்லது இரண்டு அரசுகளிடமிருந்தோ ஓய்வூதியம் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் / விதவைகளுக்கும் / உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் மருத்துவப்படி வழங்கப்பட்டு வருகிறது. இந்த தொகையானது மாதமொன்றிற்கு 100 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தப்பட்டு 15-8-2012 முதல் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவர்களது வாரிசுதாரர்கள் மருத்துவ சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைகளுக்கு வரும்போது 'அ' வகுப்பு வசதிகளுடன் கூடிய இலவச மருத்துவ சிகிச்சையும் அல்லது கட்டணப் பிரிவுகளில் எந்தவித கட்டணமும் இல்லாமல் சிகிச்சை வழங்கப்படுகிறது.

**(ஆ) போக்குவரத்து வசதி.**

மத்திய மற்றும் மாநில அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவைகள் மற்றும் அவர்களுடைய

வாரிசுதாரர்களுக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

**(இ) வீட்டு வசதி.**

தமிழ் நாடு வீட்டுவசதி வாரியம் ஒதுக்கீடு செய்யும் வீடுகளில் / மனைகளில் / அடுக்கு மாடி வீடுகளில், ஆதிதிராவிடர் / பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவீதத்திலிருந்தும், சலவையாளர் / நாவிதர்களுக்கு ஒதுக்கப்பட்ட 5 சதவீதத்திலிருந்தும் மற்றும் பொது பிரிவினர்களுக்கு ஒதுக்கப்பட்ட 37 சதவீதத்திலிருந்தும் தலா ஒரு சதவீதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ஈ) வேலைவாய்ப்பில் முன்னுரிமை.**

வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அரசுத் துறைகளுக்கும் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் வேலைவாய்ப்புக்குத் தகுதியான பெயர் பட்டியல் அனுப்பப்படும்பொழுது விடுதலைப் போராட்டத் தியாகிகளின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

**(உ) ஈமச் சடங்குச் செலவு.**

விடுதலைப் போராட்ட வீரர் இறந்தால், அவர்தம் ஈமச் சடங்குச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய நேரடி வாரிசுதாரர்களுக்கு உதவித் தொகையாக 5,000 ரூபாய் உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், வட்டாட்சியருக்கு குறையாத பதவியிலுள்ள வருவாய்த் துறை அலுவலர் ஒருவரால் அரசு சார்பில் மறைந்தவரின் உடல் மீது மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது. மாநில அரசின் / மத்திய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களையும் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தும்.

**41.** தற்போது மாநில அரசின் பல்வேறு வகையான ஓய்வூதியங்களைப் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:-

| வ. எண் | பல்வேறு வகையான ஓய்வூதியங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மாநில ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள் (மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/- + ரூ.500/- மருத்துவப்படி) | 234 |
| 2. | மாநில அரசின் குடும்ப ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்கள் (மாதம் ஒன்றுக்கு ரூ.7,500/- + ரூ.500/- மருத்துவப்படி) | 1,213 |
| 3. | சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் (மாதம் ஒன்றுக்கு ரூ.7,500/- வீதம்) | 104 |
| 4. | வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள் (மாதம் ஒன்றுக்கு ரூ.7,500/- வீதம்) | 5 |
| 5. | மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் (மாதம் ஒன்றுக்கு ரூ.7,500/- வீதம்) | 60 |
| 6. | வ.உ.சிதம்பரனார் அவர்களின் வழித்தோன்றல் (மாதம் ஒன்றுக்கு ரூ.7,500/- வீதம்) | 1 |

**மத்திய அரசின் விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியத் திட்டம்.**

**42.** 15-08-1972 முதல் மத்திய அரசு விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியத் திட்டத்தை (Swatantrata Sainik Samman Pension) செயல்படுத்தி வருகிறது. தற்போது மத்திய அரசு இத்திட்டத்தினை "ஸ்வதந்திரதா சைனிக் சம்மான் யோஜனா" என 1-4-2017 முதல் பெயர் மாற்றம் செய்துள்ளது. இத்திட்டத்தின்படி வழங்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:

(அ) 01-01-2017 முதல் "ஸ்வதந்திரதா சைனிக் சம்மான் யோஜனா" திட்டத்தின் மூலம் மத்திய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறும் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றிற்கு 26,000 ரூபாய் ஓய்வூதியத்துடன் அகவிலைப்படியும் சேர்த்து வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு மத்திய அரசு ஓய்வூதியம் பெற்று வரும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை 889 ஆகும்.

(ஆ) மத்திய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் / மத்திய அரசு குடும்ப ஓய்வூதியம் பெறுபவருக்கு, மாநில அரசின் நிதியிலிருந்து, 500 ரூபாய் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

**43.** மேற்குறிப்பிட்ட விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியத் திட்டங்களுக்காக 2019-2020 ஆம் ஆண்டிற்கு 18,73,25,000 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஓ.பன்னீர்செல்வம்**
**துணை முதலமைச்சர்.**